நம்பிக்கையின் தேவன்

பரிசுத்த ஆவியின் பலத்தினாலே எனக்கு நம்பிக்கை பெருகும்படி, நம்பிக்கையின் தேவன் அவரை விசுவாசிக்கும்போது எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் என்னை நிரப்புகிறார்.[1]

நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு, எனக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி நான் உம்மிடம் அடைக்கலமாய் ஓடி வந்துள்ளேன். இந்த நம்பிக்கை எனக்கு நிலையும் உறுதியுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது.[2]

விசுவாசமானது நான் நம்புகிறவைகளின் உறுதியாய் இருக்கிறது.[3]

என்னில் நற்கிரியையைத் தொடங்கின நீர், அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திடுவீர் என்று உறுதியாய் நம்புகிறேன்.[4]

உம்முடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள். உமது உண்மை பெரிதாயிருக்கிறது. கர்த்தர் என் பங்கு என்று நான் என்னிடம் சொல்லிக்கொள்வேன்; ஆகையால் அவரிடத்தில் நம்பிக்கைகொண்டிருப்பேன்.[5]

ஆமென்

[1] ரோமர் 15:13
[2] எபிரெயர் 6:18,19
[3] எபிரெயர் 11:1
[4] பிலிப்பியர் 1:5
[5] புலம்பல் 3:22ஆ-24

ரோமர் 15:13

பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக.

எபிரேயர் 6:18,19

நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார். அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது.

எபிரேயர் 11:1

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.

பிலிப்பியர் 1:5

உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி,

புலம்பல் 3:22ஆ–24

அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது. கர்த்தர் என் பங்கு என்று என் ஆத்துமா சொல்லும்; ஆகையால் அவரிடத்தில் நம்பிக்கைகொண்டிருப்பேன்.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au